செ.வெ.எண்:02/2017 நாள்:03.07.2017

## சிவகங்கை மாவட்டத்தில் மாற்றுத்திறன் கொண்ட மாணவர்களுக்கான உள்ளடங்கிய கல்வித் திட்டத்தின் கீழ் மருத்துவ முகாம்.

சிவகங்கை மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் பயின்று வரும் மாற்றுத்திறனுடைய மாணவர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்காகவும் மற்றும் அவர்கள் சக மாணவர்களோடு இணைந்து இலகுவாக கல்வி கற்பதற்காகவும் வட்டார அளவில் சிவகங்கை மாவட்டம் அனைவருக்கும் கல்வித் திட்டம் உள்ளடங்கிய கல்வித் திட்டத்தின் கீழ் மருத்துவ முகாம்கள் பின்வருமாறு நடைபெறவுள்ளது.

மருத்துவ முகாம் நடைபெறும் நேரம் , நாள் மற்றும் இடம்.

| வ. எண் | ஒன்றியம் | மருத்துவ முகாம் நடைபெறும் நாள், கிழமை மற்றும் நேரம். | மருத்துவ முகாம் நடைபெறும் இடம் |
|---|---|---|---|
| 1 | சிவகங்கை | 03.07.2017- திங்கள்<br>நேரம்:- காலை 9.30 மணி முதல் | வட்டார வளமையம்,அரசு மேல்நிலைப்பள்ளி, மருதுபாண்டியர் நகர், மாவட்ட ஆட்சியர் வளாகம், சிவகங்கை. |
| 2 | காளையார்கோவில் | 04.07.2017-செவ்வாய்<br>நேரம்:- காலை 9.30 மணி முதல் | அரசு மேல்நிலைப்பள்ளி, மறவமங்கலம் ரோடு, காளையார்கோவில். |
| 3 | மானாமதுரை | 05.07.2017-புதன்<br>நேரம்:- காலை 9.30 மணி முதல் | O.V.C மேல்நிலைப்பள்ளி, பழைய பேருந்து நிலையம் அருகில், மானாமதுரை. |
| 4 | திருப்புவனம் | 06.07.2017-வியாழன்<br>நேரம்:- காலை 9.30 மணி முதல் | வட்டார வளமையம், அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, திருப்புவனம். |
| 5 | இளையான்குடி | 07.07.2017-வெள்ளி<br>நேரம்:-காலை 9.30 மணி முதல் | இளையான்குடி மேல்நிலைப்பள்ளி , இளையான்குடி |
| 6 | தேவகோட்டை | 10.07.2017-திங்கள்<br>நேரம்:-காலை 9.30 மணி முதல் | 6 வது தொகுதி நகரவை உயர்நிலைப்பள்ளி, தேவகோட்டை |
| 7 | கண்ணங்குடி | 11.07.2017-செவ்வாய்<br>நேரம்:-காலை 9.30 மணி முதல் | ஊ.ஒ.தொ.பள்ளி, அனுமந்தக்குடி |
| 8 | சாக்கோட்டை | 12.07.2017-புதன்<br>நேரம்:-காலை 9.30 மணி முதல் | PRNC. நகரவை நடுநிலைப்பள்ளி, காரைக்குடி |
| 9 | திருப்பத்தூர் | 13.07.2017-வியாழன்<br>நேரம்:-காலை 9.30 மணி முதல் | R.C.நடுநிலைப்பள்ளி, பேருந்து நிலையம் அருகில், திருப்பத்தூர். |
| 10 | சிங்கம்புணரி | 14.07.2017-வெள்ளி<br>நேரம்:-காலை 9.30 மணி முதல் | அரசு ஆண்கள் மேல்நிலைப்பள்ளி, சிங்கம்புணரி. |
| 11 | எஸ்.புதூர் | 17.07.2017-திங்கள்<br>நேரம்:-காலை 9.30 மணி முதல் | அரசு மேல்நிலைப்பள்ளி, எஸ்.புதூர். |
| 12 | கல்லல் | 18.07.2017-செவ்வாய்<br>நேரம்:-காலை 9.30 மணி முதல் | அரசு பெண்கள் உயர்நிலைப்பள்ளி, கல்லல். |

இம்மருத்துவ முகாம்களின் வாயிலாக 6 முதல் 14 வயது வரை உள்ள மாற்றுத் திறனுடைய குழந்தைகளை மதிப்பீடு செய்து அவர்களுக்கு தேசிய அடையாள அட்டை, உதவி உபகரணங்கள் மற்றும் அறுவை சிகிச்சை போன்றவை முற்றிலும் இலவசமாக வழங்கப்படவுள்ளது. எனவே, சிவகங்கை மாவட்டத்தில் உள்ள பள்ளிகளில் பயிலும் மாற்றுத் திறன் கொண்ட குழந்தைகளை, தங்கள் ஒன்றியங்களில் நடைபெறும் மருத்துவ முகாமில் கலந்து கொண்டு பயன்பெறுமாறு சிவகங்கை மாவட்ட ஆட்சித் தலைவர் திருமதி.சு.மலர்விழி,இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

::வெளியீடு::

செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம்,
சிவகங்கை.